# Rasikamani T.K.C.'s Contribution to Tamil Music

**Dr. S. Dhanalakshmi**
*Assistant Professor, Department of Tamil*
*Thiagarajar College, Madurai*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17346614

**Abstract**

*Among the three Tamils, namely, literature, music and drama, musical Tamil is the foremost. Classical Tamil music is the oldest musical heritage of the Tamils. Music books reveal that such Tamil music has been in use since before the Sangam period. During the time when foreigners ruled Tamil Nadu, Tamil music had declined. In this situation, many people worked for the revival of Tamil music. One of them, Rasikamani D.K. Chidambaranatha Mudaliar, has done various works to establish Tamil music on a stable footing. This article aims to highlight his artistic work, knowledge of music, passion for music and contribution to Tamil music.*
***Keywords:*** *Tamilisai, Tamilisai Movement, T.K. Chidambaranatha Mudaliar, T.K.C. Letters, T.K.C. Artwork*

**References**

1. Ilangumaran, R. – The Tamil Isai Movement, Manivasagar Publications, Chennai.
2. Shanmuga Sundaram, S. – Rasikamani's Artistic Trail, Kavya Publications, Kodambakkam, Chennai. First Edition, 2009.
3. Shanmuga Selva Ganapathi. – The Founding Trinity of Carnatic Music, Karpagam Publications, Thanjavur. First Edition, 1996.
4. Selladurai, P.T. – Musicology of South India, Vaigai Publications, Dindigul. First Edition, 2005.
5. Deepa Natarajan. – Rasikamani T.K.C. Letters, Uyirmai Publications, Abhiramapuram, Chennai. First Edition, 2010.

# தமிழிசைக்கு ரசிகமணி டி.கே.சி. ஆற்றிய தொண்டு

*முனைவர் சு. தனலட்சுமி*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தியாகராசர் கல்லூரி, மதுரை

***ஆய்வுச் சுருக்கம்***
*இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழில் முதன்மையானது இசைத்தமிழாகும். பழந்தமிழ் இசை என்பது தமிழரின் மரபு வழியான மிகப் பழைமையான இசைச் செல்வமாகும். அத்தகைய தமிழிசை, சங்ககாலத்திற்கு முன்பிருந்தே வழக்கத்தில் உள்ளதை இசை நூல்கள் புலப்படுத்துகின்றன. தமிழகத்தில் அந்நியர் ஆட்சி செய்த காலத்தில் தமிழிசை வீழ்ச்சியடைந்திருந்தது. இந்நிலையில் தமிழிசையின் எழுச்சிக்கு பலரும் பாடுபட்டனர். அவர்களுள் ஒருவரான ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் தமிழிசை நிலையாகக் கால்கொள்ள பல்வேறு பணிகளைச் செய்துள்ளார். அவரது கலைப்பணி குறித்தும் இசையறிவும், இசையின் மீது கொண்ட நாட்டமும் தமிழிசைக்கு ஆற்றிய தொண்டினையும் எடுத்துரைப்பதாய் இக்கட்டுரை அமைந்துள்ளது.*
***திறவுச் சொற்கள்:*** *தமிழிசை, தமிழிசை இயக்கம், டி.கே. சிதம்பரநாத முதலியார், டி.கே.சி. கடிதங்கள், டி.கே.சி. கலைப்பணி*

## முன்னுரை

தமிழர் வளர்த்த கலைகளில் மிகப் பழமையானது இசைக்கலை. காதினால் கேட்டு இன்புறத்தக்க இன்கலையே இசைக் கலையாகும். அத்தகைய தமிழிசை அந்நியர் ஆட்சியின் போது வீழ்ச்சி நிலை அடைந்திருந்தது. தமிழிசையின் எழுச்சிக்காகத் தமிழ் அறிஞர்கள் பலர்குரல் கொடுத்தனர். அவர்களுள் ஒருவர் ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் ஆவார். தமிழிசை குறித்தும் தமிழிசையின் எழுச்சிக்கு அவர் ஆற்றிய தொண்டு குறித்தும் எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### டி.கே.சிதம்பரநாதன்

***(18-8-1881 - 16-2-1954)***

தமிழ் இலக்கியங்களை நுண்மையாகப் படித்தறிந்து அதன் உண்மைத் தன்மையைக் கண்டறிந்து கூறும் ஆற்றலுடைய அறிஞர்களுள் ஒருவர் டி.கே. சிதம்பரநாத முதலியார். இவர் 1881ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 18ஆம் நாள் ஸ்ரீவில்லிபுத்தூரில் பிறந்தார். இவரது பெற்றோர் தீத்தாரப்ப முதலியார், மீனம்மாள் அண்ணி ஆகியோராவர். "வட்டத் தொட்டி" என்ற இலக்கிய அமைப்பின் வாயிலாக பலரையும் இலக்கியத்தின் மீது ஆர்வம் கொள்ளச் செய்தவர். இலக்கிய ஆர்வமும் ஆழ்ந்த புலமையும் கொண்ட டி.கே.சி.க்கு, இலக்கியங்களின் மீது கொண்ட அவரது பெருவிருப்பத்தின் காரணமாக "ரசிகமணி" என்ற பெயரைக் கல்கி சூட்டினார். இவருக்கு வட்டத்தொட்டி நாயகர், வளர்தமிழ் ஆர்வலர், குற்றால முனிவர் என்ற வேறுபெயர்களும் அவரது இலக்கிய நட்பு வட்டத்தினரால் வழங்கப்பட்டன. ஆயினும், இலக்கிய உலகினரால் இவர், "ரசிகமணி டி.கே.சி." என்றே அழைக்கப்பட்டார்.

## கர்நாடக சங்கீதமும் தமிழிசை இயக்கமும்

நூற்றாண்டுகள் கடந்து இசைக்கலை தமிழகத்தில் பரவி நிலைபெற்று உள்ளமைக்கு தமிழர்களின் தமிழிசை அறிவே காரணமாகும். தமிழிசை என்பது தமிழர்களின் இசை முறைமையாகும். தமிழின் தொன்மையான

இலக்கியமாகப் போற்றப்படும் தொல்காப்பியம், சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், பக்தி இலக்கியம், நாட்டுப்புற இலக்கியங்களிலும் தமிழிசையின் கூறுகள் நீக்கமற நிறைந்து கிடக்கின்றன. எனினும் இசைக்கலை காலந்தோறும் பெற்று வந்த வளர்ச்சியில் பல்வேறு பண்பாட்டுக் கலப்புகள் நிகழ்ந்திருக்கின்றன. இதனை, "தமிழரிடத் திருந்த பல அரிய விஷயங்களையும் மொழி பெயர்த்துத் தமிழர் அறியுமுன்னரே அவற்றைத் தாம் அறிந்தன போலவும் வடமொழியினின்றும் தமிழிற்கு அவை வந்தன போலவும் காட்டினர்" ((இரா. இளங்குமரன், தமிழிசை இயக்கம், ப-33) என்ற பரிதிமாற் கலைஞரின் கூற்றின் வழி அறியமுடிகிறது. தமிழிசையின் பெயர்கள் கூட வடமொழிப் பெயர்களாக இருப்பதைக் காண முடிகிறது. அக்காலத்தில் இசைக் கச்சேரிகளில் தமிழில் பாடல்கள் இசைக்காமல் தெலுங்கு மற்றும் சமஸ்கிருத மொழிகளில் கீர்த்தனைகள் பாடியுள்ளனர்.

வடஇந்தியாவில் வழங்கப்படும் இசையை "இந்துஸ்தானி" என்றும், தென்னிந்தியாவில் வழங்கப்படும் இசையைக் "கருநாடக இசை" என்றும் வழங்குவர். கர்நாடக இசை என்ற தொடராட்சியை முதன்முதலில், "கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் தக்காணத்தின் ஒரு பகுதியை ஆண்ட "சோமேசுவர புலோகமல்லன்" (1116-1127) என்பவன், தான் எழுதிய "மானசோல்லாசம் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். அவர் இந்திய இசையை இரு கூறாக்கி வடஇந்திய இசையை இந்து ஸ்தானி என்றும், தென்னிந்திய இசையைக் கருநாடகம் என்றும் அழைத்தார்" (மு.அருணாசலம், கருநாடக சங்கீதம் ஆதி மும்மூர்த்திகள், ப.19) என இதனைக் குறிப்பிடுகிறார் மு.அருணாச்சலம். அன்று முதல் வடநாட்டார் தென்னாட்டு இசையைக் கருநாடக இசையென அழைக்கலாயினர்.

செவ்வியல் இசையான கர்நாடக சங்கீதத்தில் இசைக் கச்சேரிகளில் தெலுங்குக் கீர்த்தனைகள் தான் பெரும்பாலும் பாடப்பட்டன. தமிழ்க்கீர்த்தனைகள் இறுதியில் மட்டும் பாடப்பட்டன. அப்பாடல்கள் "துக்கடா" அல்லது "உதிரிப்பாடல்கள்" எனப்பட்டன. இதனை, "இறுதியில் மட்டுமே இரண்டொரு தமிழ்ப் பாடல்கள்"துக்கடா" என்ற பெயரில் பாடப் பட்டுவந்தன" (பி.டி.செல்லதுரை, தென்னக இசையியல், ப.194) என்று குறிப்பிடுகின்றார் பி.டி.செல்லத்துரை. இசைக் கச்சேரிகளை நிறைவு செய்யும் வேளையில் தமிழ்ப் பாடல்கள் பாடப்படும் அவல நிலையை அறியமுடிகிறது.

## தமிழிசையின் மறுமலர்ச்சி

தமிழிசையின் மேன்மையை உலகுக்கு எடுத்துக்காட்டியவர்களுள்முக்கியமானவர் ஆபிரகாம் பண்டிதர். இவர் 1912-1916 வரை ஒவ்வொரு ஆண்டும் இசைத்தமிழ்க் கருத்தரங்கம் நிகழ்த்தி தமிழிசை ஆய்வைப் பல்வேறு அரங்குகளிலும் அறிஞர்கள் கொண்டாடும் வகையில் மெய்ப்பித்துக் காட்டிய பெருமைக்குரியவர். "தமிழிசையே உலகத்தலைமை இசைஎன்றும்அவ்விசையே மற்றை மற்றை இசைகளுக்கு அடிமூலமாய் அமைந்து ஆட்சி செய்கின்றது என்றும் நிறுவிக்காட்டினார்" (இரா.இளங்குமரன், தமிழிசை இயக்கம், ப-49)

தமிழ்நாட்டு இசை மேடைகளில் தமிழ் தீண்டத்தகாத மொழியாக விலக்கி வைக்கப்பட்டிருந்த காலத்தில், அந்த அவலத்தைக் கண்டு மொழிப்பற்று கொண்ட தமிழ் அறிஞர்களும் தமிழ்ப் பெருமக்களும் உள்ளம் குமுறினர். அவ்வகையில் தமிழிசைக்கு மறுமலர்ச்சியை உண்டாக்கியவர் கலை வள்ளல் இராசா சர் அண்ணாமலைச் செட்டியார். இம்முயற்சியில் பேருதவியாக இருந்தவர் ஆர்.கே.சண்முகம்செட்டியார். இராசா சர் அண்ணாமலைச் செட்டியார் தமிழிசைச் சங்கம் அமைத்தும் தமிழிசைக்

கல்லூரி நிறுவியும் இசைத்தமிழ் நூல்களை வெளிப்படுத்தியும் பெருந்தொண்டு செய்துள்ளார். இசைக் கச்சேரிகளில் தமிழிலே பாடல்கள் பாட வேண்டும் என்பதை இயக்கமாக்கிச் செயல்படுத்தினார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடத்திய மாநாட்டினைப் போல வேறு பல ஊர்களிலும் மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. இதனை, "திருவண்ணாமலை, தேவகோட்டை, திருச்சிராப்பள்ளி இசை மாநாடுகளுக்குப் பின்னர் புதுக்கோட்டை, ஆத்தங்குடி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, தஞ்சாவுர் முதலிய இடங்களிலும் இசை மாநாடுகள் நடைபெற்றன. தமிழிசை இயக்கம் நன்கு கால்கொள்ளல் ஆயிற்று. மேற்குறித்த இடங்களுள் தேவகோட்டையிலும் ஆத்தங்குடியிலும் தமிழிசைக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன" (இரா.இளங்குமரன், தமிழிசை இயக்கம், ப.210) என்ற இளங்குமரனார் கூற்றின் மூலம் அறியமுடிகிறது.

## டி.கே.சி.யின் கலைப்பணி

அண்ணாமலைச் செட்டியார், ஆர்.கே. சண்முகம் இவர்களுடன் டி.கே.சி.யும் இணைந்து தமிழிசை இயக்கத்தைத் தோற்றுவிக்கக் காரணமாக இருந்தார். இவ்வியக்கத்தின் துவக்கத்திற்கு டி.கே.சி.யின் பங்களிப்புப் பற்றி, "தமிழிசை இயக்கத்தைத் தொடங்கி வலுவான அடிப்படை அமைத்து அது வளர்ந்த நிலையில் திறப்புவிழாவும் நடத்தியவர் டி.கே.சி" (இரா.இளங்குமரன், தமிழிசை இயக்கம், ப.209) எனக் குறிப்பிடுகிறார் கல்கி.

தமிழிசை குறித்து டி.கே.சி. "தமிழ்நாட்டில் எத்தனையோ நூற்றாண்டுகளாக வழங்கி வந்த நாதஸ்வர இசையென்ன, வீணை இசையென்ன, நாட்டிய இசையென்ன, இவற்றில் வழங்கிவந்த எத்தனையோ வேறுபாடோடு கூடிய பாட்டுக்கள், ஸ்வரக் கோவைகள், ராகங்கள், ஒலிக் கற்பனைகள் - இவையெல்லாமே தமிழ்நாட்டின் இசை. தமிழ் இசை என்றால் தமிழ்நாட்டில் தொன்று தொட்டு வழங்கி வந்துள்ள குரல் இசை, வாத்திய இசை இரண்டுமேதான். தமிழ்ச் சொற்களில் அமைந்த பாட்டுக்களோடு தமிழ்நாட்டு மக்களுடைய இசைக் கற்பனைகள் எல்லாம் தமிழர்களுடைய சங்கீத ஞானம் எல்லாம் சேர்ந்துதான் தமிழ் இசை" (சு.சண்முகசுந்தரம், ரசிகமணி ரசனைத்தடம், ப.30) என தமிழிசை மரபில் தொன்றுதொட்டு இருந்து வரும் இசையின் கூறுகளை டி.கே.சி. வெளிப்படுத்தியுள்ளார்.

## டி.கே.சி.யின் இசையறிவு

இராகங்களை அறிந்து அதைப் போற்றுவது டி.கே.சி.யின் பண்பாகத் திகழ்கிறது. "நம்முடைய சாவேரி போலவும், அடாணா போலவும் உயர்ந்த ரகமான தேன் எங்கும் கிடையாது" (டி.கே.சி.கடிதங்கள்.221) என்று கூறுவதன்வழி இராகங்கள் குறித்த அவரது இசையறிவு புலப்படுத்தப்படுகிறது. ஆனால் டி.கே.சி.யுடன் நெருங்கிப் பழகியவர்கள் மட்டுமே அவரது இசையறிவினைப் புரிந்து கொள்ள முடியும் என்பதனை, "டி.கே.சி. யோடு நெருங்கிப் பழகிய நண்பர்களுக்கும் சில சங்கீத வித்வான்களுக்குமே டி.கே.சி. சங்கீதத்தின் ஜீவனையே உணர்ந்தவர்கள் என்பது அநுபவத்தில் தெரியும்" (சு.சண்முக சுந்தரம், ரசிகமணி ரசனைத்தடம், ப.28) என்று குறிப்பிடுகிறார் பாஸ்கரத் தொண்டைமான். "கர்ணாமிர்தத் திரட்டின் விஷயம் எனக்கு நன்றாய்ப் புரியவில்லை. சங்கீத வித்வான்களைக் கொண்டு தெரிந்து கொள்ள முயலுகிறேன்" (டி.கே.சி.கடிதங்கள். 67) என்று பாஸ்கரத் தொண்டைமானுக்கு எழுதிய கடிதத்தின் மூலம் இசை குறித்து அறிந்து கொள்ளும் ஆர்வமும் அவரது ஈடுபாடும் விளங்குகிறது.

தமிழிசையில் வடமொழிக் கலப்பு ஏற்படுவது குறித்தும் வருந்தியுள்ளார். அதனைத் தம் கடிதத்தில், "தமிழ்நாட்டில் வழங்குகிற ராகங்கள் எல்லாம் இங்கேயே

பிறந்து வளர்ந்து வந்தன. ஆதியில் தமிழ்ப் பெயர்கள் அவைகளுக்கு வழங்கி வந்தன. நம்முடைய தலையில் வடமொழிப் பெயர்கள் வந்து விழுந்தது போல், ராகங்கள் தலைகளிலும் வடமொழிப் பெயர்கள் விழுந்து தொலைத்தன" (டி.கே.சி. கடிதங்கள். 67) என்று பாஸ்கரத் தொண்டை மானுக்கு எழுதிய கடிதத்தில் பெயரிடுதலில் வடமொழிக் கலப்பு வந்ததைப் போல இராகங்களின் பெயரிலும் வடமொழிக் கலப்பு வந்தது குறித்து தனது ஆற்றாமையைப் புலப்படுத்துகிறார்.

**கலைரசிகர்**

மனிதன் புறவுலகில் இருப்பதை உணர்த்துவது தான் கலை என்கிறார் டி.கே.சி.. மேலும் கலையின் பூரணத் தன்மையானது மனிதனை இசையின் கூறாய் மாற்றிவிட வேண்டும் என்று கூறுகிறார். பட்டாபிராமிற்கு எழுதிய கடிதத்தில் எம்.எஸ்.சுப்புலட்சுமியின் பாடலைக் கேட்டின்புற்ற செய்தியினை, "கனவோ நினைவோ என்ற பாடலும் கேட்டவர்களை உருக்கிவிட்டன. கலை என்றால் அப்படி அல்லவா இருக்க வேண்டும் நம்முடைய உணர்ச்சி, தத்துவத்தில்ப் போய்க் கலந்து நம்மை வேறு வஸ்துவாக ஆக்கிவிடவேண்டும். அதனால் நமக்கு வேறு பிறப்பு ஒன்று கிட்டுகிறது. அதுதான் கலை" (டி.கே.சி. கடிதங்கள்.555) எனக் குறிப்பிடுவதன் மூலம் கலையை அனுபவித்தால் மனிதன் இந்த உலகினை மறந்து பிறிதொரு உலகத்தில் வாழும் நிலையை எய்துவதாகக் குறிப்பிடுகிறார்.

**தமிழிசை**

இசை மன்றங்களில் தமிழில் பாட வேண்டும் என்பதையே, தான் வலியுறுத்தி வருவதாகபாஸ்கரத் தொண்டைமானுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகிறார். தமிழிசை மாநாடு குறித்து, "நானும் பல வருஷங்களாகத் தமிழ்ப் பாடல்களே சங்கீதக் கச்சேரிகளில் பாடவேண்டும் என்று சொல்லிச் சொல்லி வருகிறேன். தமிழர்கள் அதற்கு இசையவில்லை. கடைசியாக செட்டிநாட்டு ராஜா அவர்கள் பதினாறாயிரம் ரூபாய், தமிழ்ப்பாட்டாகக் கச்சேரி செய்பவர்களுக்கு வெகுமதி கொடுப்பதற்கு ரூ.10000 ஒதுக்கி வைத்து, வருகிற 14.8.41 முதல் 17.8.41 வரை அண்ணாமலை யுனிவெர்சிட்டியில் தமிழிசை மாநாடும் நடத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். என்னையும் அழைத்திருக்கிறார்கள். சங்கீதம் தெரியாத என் போன்றவன் சொல் எப்படி அங்குள்ளவர்களுக்கு ஏறப் போகிறதோ தெரியவில்லை. அண்ணாநகருக்குப் போகிறேன்" (டி.கே.சி.யின் கடிதங்கள்,64) என இசைக் கச்சேரிகளில் தமிழில் பாட வேண்டும் என்ற தனது கருத்துக்கு முன்னெடுப்பாக தமிழிசை இயக்கம் தொடங்கப்பட்டதையும் அதற்கான முதல் மாநாட்டில், தான் கலந்து கொள்ளப் போவதையும் எடுத்துரைக்கிறார். அம்மாநாட்டில் கலந்து கொண்ட பலர் இசைக் கச்சேரிகளில் தமிழில் பாட வேண்டும் என்பதைத் தீர்மானமாக முன்மொழிந்தனர்.

இசைக்கலையில் தேக்கம் ஏற்பட்டு வீழ்ச்சியடைய நேரிடும் என்பதால் அதனை மேலும் வளர்த்தெடுக்க இளைய தலைமுறையினர் முன்வர வேண்டும் என்று டி.கே.சி. இசையின் மீதான தனது அக்கறையை வெளிப்படுத்தியுள்ளார். "அன்று ரயில் சௌகரியமாகவே கிடைத்தது. ரயிலில் ஒரு பிரபல சங்கீத வித்வான் உடன் பிரயாணம் செய்தார். சங்கீதத்தைப்பற்றிப் பல விஷயங்களை அலச முடிந்தது. சங்கீத உலகம் தற்போது பைத்தியக்கார உலகமாய்த்தான் இருக்கிறது என்று ஒருவகையாய் ஒப்புக் கொண்டார். உயர்ந்த சங்கீதத்தை வித்வான்களும் ஒப்புக் கொள்வதில்லை. கேட்பவர்களும் ஒப்புக் கொள்வதில்லை. வெறும் படாடோபத்தை, பொருள் அற்ற சப்தத்தை ஹா! ஹோ! என்றெல்லாம் பாராட்டுகிறார்கள். தலை அசைக்கிற அசைப்பில் தலையும் குடுமியும் தெறித்துப் போய் எங்கேயாவது விழுந்துவிடுமோ என்று

பயப்பட வேண்டியிருக்கும். உண்மையான உணர்ச்சியோடு கூடிய சங்கீதத்தை ஏதோ ஒன்றுக்கும் உதவாதது என்று பாகவதர்கள் தீர்ப்புச் சொல்லி விடுவார்கள். நம்முடைய பி.ஏ.பி.எல். அண்ணாக்கள் இருக்கிறார்களே அவர்களும் ஆமாம்போட்டு விடுவார்கள். இதையெல்லாம் வித்வான் ஒப்புக்கொண்டார். வருந்தவும் செய்தார். எனக்கு எவ்வளவோ திருப்தியாய்இருந்தது" (டி.கே.சி.கடிதங்கள்.787) என்று சங்கீத உலகில் அக்காலத்தில் ஏற்பட்டிருந்த போலியான இசைக் கலைஞர்கள் பற்றிய வருத்தத்தையும் சங்கீத வித்வான்களிடையே உள்ள தேக்க நிலையையும் சிவஞானம் பிள்ளைக்கு எழுதிய கடிதத்தின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

சித்திரத்தை சுவரிலும், கவியை ஓலையிலும் எழுதியிருப்பதால் இன்றளவும் அவை நிலைபேறுடையனவாக இருந்து வருகின்றன. ஆனால் இசையை எங்ஙனம் பாதுகாப்பது என்ற கவலையை பட்டாபிராமுக்கு எழுதிய கடிதத்தில் வெளிப்படுத்துகிறார். "சங்கீதத்தை என்ன செய்ய. காற்றோடு காற்றாய் அல்லவா போய்விடுகிறது. சங்கீதக் கலைக்காரன் சிருஷ்டிகள் எத்தனை எத்தனையோ ஒழிந்து போய்விட்டன. அப்படிப் போய்விட்டதினாலேயே சங்கீதக் கலைக்கு மதிப்பிடும் கருவி இல்லாமல் போய்விட்டது. சென்ற முப்பது வருஷங்களாக சங்கீதம் உயிர் அற்றதாய் போய்விட்டது. உயிர் அற்றது உயிர் உள்ளது என்று பகுக்கும் திறம் சாதாரண ஜனங்களுக்கும் இல்லாது போய்விட்டது. போனது போகட்டும். கிராமபோன் காரணமாக சங்கீதம் நித்தியத்துவம் அடைகிறது." (டி.கே.சி.கடிதங்கள். 287) இக்கருத்தினூடாக பாடுபவர்கள் தம் கலையை தம் அடுத்த தலைமுறையினருக்குக் கற்றுக் கொடுக்காமல் போனால் காற்றில் கரைந்துவிடும் ஒன்றாக மாறிவிடும் என்ற அவரது ஆற்றாமையைக் கடிதம் விளக்கி நிற்கின்றது. ஆயினும்அவருடையகாலத்தில் "கிராமபோன்" என்னும் இசையை ஒலிக்கச் செய்யும் தட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டு அதில்பதிவுசெய்யப்பட்டுமீண்டும்மீண்டும் கேட்பதற்கு ஏதுவான சூழல் இருந்தது. அந்நிலைமை அவரை ஆறுதல்படுத்தியது என்பதை வெளிப்படுத்துகிறார்.

## முடிவுரை

தமிழகத்தில் தோன்றி வளர்ந்த எண்ணற்ற கலைகள் பண்பாட்டின் அடையாளங்களாகக் காணப்படுகின்றன. அந்தவரிசையில்இசைக் கலையும் ஒன்று. தமிழர்களின் தலைமை இசையாகத் திகழ்ந்த தமிழிசை அந்நிய ஆட்சியினால் அடைந்த வீழ்ச்சியினையும் தமிழிசையின் பெருமையினையும் உணர்ந்து அதனை மீட்டெடுக்கப் பலரும் போராடியுள்ளனர். அவர்களுள் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த டி.கே.சி.யின் தமிழிசையறிவு, கலை ரசனை, தமிழிசை மேலோங்கச் செய்ய முன்னெடுத்த அவரது பணிகளையும் அவர் எழுதிய கடிதங்களின் வாயிலாக அறிந்து கொள்ளமுடிகிறது. தமிழிசையின் எழுச்சிக்கு டி.கே.சி. செய்த கலைப்பணி போற்றுதலுக்குரியது.

## துணை நூல்கள்


1. இளங்குமரன். இரா., தமிழிசைஇயக்கம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. சண்முக சுந்தரம். சு. - ரசிகமணியின் ரசனைத்தடம், காவ்யா, கோடம்பாக்கம், சென்னை, முதற்பதிப்பு- 2009.
3. சண்முக செல்வகணபதி, - கருநாடக சங்கீதம் ஆதிமும்மூர்த்திகள், கற்பகம் பதிப்பகம், தஞ்சாவூர் -1. முதற்பதிப்பு - 1996.
4. செல்லதுரை. பி.டி., தென்னக இசையியல், வைகறை பதிப்பகம், திண்டுக்கல், முதற்பதிப்பு - 2005
5. தீப.நடராஜன் - ரசிகமணி டி.கே.சி. கடிதங்கள், உயிர்மை பதிப்பகம், அபிராமபுரம், சென்னை, முதற்பதிப்பு - 2010.